

# “இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப்புதின, சிறுகதை ஆசிரியர்கள்”

## பன்னாட்டுக் கருத்தரங்கம்-2018



பதிப்பாசிரியர்

**பேரா.சே.செந்தமிழ்ப்பாவை**


**தமிழ்ப்பண்பாட்டு மையம்**

**அழகப்பா பல்கலைக்கழகம்**

(தேசியத் தரநிர்ணயக் குழுவின் மூன்றாம் சுற்றுத் தரமதிப்பீட்டில் 'A+' (CGPA: 3.64) தகுதி பெற்றது.
மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை மற்றும் பல்கலைக்கழக மானியக்குழுவால்
முதல்தரப் பல்கலைக்கழகம் மற்றும் தன்னாட்சித் தகுதி பெற்றது.
2019 : QS ASIA தரவரிசை - 216, QS BRICS தரவரிசை - 104, QS. இந்தியா தரவரிசை - 20)

**காரைக்குடி - 3**


“இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப்புதின, சிறுகதை ஆசிரியர்கள்”

இலக்கியம் காலந்தோறும் வெவ்வேறு வடிவங்களை மேற்கொள்கிறது. இருபதாம் நூற்றாண்டில் பண்டைத் தனிச் செய்யுட்கள் பெற்றிருந்த இடத்தைச் சிறுகதைகளும் காவியங்கள் பெற்றிருந்த இடத்தைப் புதினங்களும் தமதாக்கிக் கொண்டுவிட்டன. இதன் பெருமையை விளக்க வேண்டுமெனில் இளங்கோவடிகளோ, கம்பரோ இன்று வாழ்ந்தால் நிச்சயம் காவியம் எழுத மாட்டார்கள் : புதினமும் சிறுகதையுமே எழுதுவார்கள்.

- மா.இராமலிங்கம்


ISBN 978-0-359-26679-1

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப்புதின, சிறுகதை ஆசிரியர்கள்

© முனைவர் சே.செந்தமிழ்ப்பாவை

முதல் பதிப்பு : திசம்பர் - 2018.

பதிப்பகம் : மணியரசி பதிப்பகம், தேவகோட்டை

வெளியீடு : தமிழ்ப் பண்பாட்டு மையம்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி - 3.

அச்சாக்கம் ரியல் இம்பெக்ட் சொலுசன், சென்னை

பக்கங்கள் : 529

விலை : உருபாய் 450

************************************************************

**IRUBATHAM NOOTRANDU TAMIZH PUTHINA SIRUKATHAI AASIRIYARKAL**

**© DR.S.SENTHAMIZHPAVAI**

First Edition : December 2018

Published By : Maniyarasi Pathippagam, Devakottai

Printed at Real Impact Resolution, Chennai

Pages : 529

Prices : Rs.450

ISBN : 978-0-359-26679-1

32. நகைச்சுவைப் படைப்பாளன் தேவன்
முனைவர் சு.சத்தியவதி 163
33. விந்தன் - இரா.சபரிநாத் 168
34. எழுத்துலக மேதை தேவன்
முனைவர் ஆறு.சரவணக்குமார் &
கு.இரா.பத்மினிதேவி 171
35. ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜ் சிறுகதையில்
திருவிவிலியமும் திருக்குறளும்
முனைவர் யா.சாம்ராஜ், 175
36. இரா.சிவகாசிநாதனின் வாழ்வின் வரங்கள்
பா.சாந்தி 179
37. மேலாண்மை பொன்னுசாமியின் வாழ்க்கை வரலாறு
முனைவர் வே.சித்ரா 184
38. கு.அழகிரிசாமியின் வாழ்வும் பணியும்
மு.சிவசுப்பிரமணியன் 188
39. சிவசங்கரி - மு.சிவசுப்பிரமணியன் 192
40. மீ.ப.சோமுவின் வாழ்வும் பணியும்
ப.சிவக்குமார் & சி.செல்வக்குமார் 198
41. வெ.இறையன்புவின் தமிழ்ப்பணிகள் - முனைவர்
மா.சிதம்பரம் & சு.தேவி 200
42. நா.பார்த்தசாரதியின் படைப்புகளும் பணிகளும்
முனைவர்மா.சிதம்பரம், & செ.பொன்மோனோலிசா 203
43. சிறுகதை உலகில் எழுத்தாளர் சிவசங்கரியின் பங்கு
முனைவர் மா.சுகந்தி 207
44. முனைவர் சு.வேணுகோபாலின் படைப்பாக்கங்கள்
ஆ.சுந்தர் 211
45. வள்ளிக்கண்ணனின் வாழ்வும் பணியும்
நா.சுரேந்திரன் 216
46. கி.ராஜநாராயணனின் வாழ்வும் பணியும்
முனைவர் சொ.சுரேஷ் 218
47. தோப்பில் முகமது மீரான் - கா.சுபா 220
48. வாழ்க்கைப் பாடத்தைப் போதிக்கும் நல்லாசான்
பாலகுமாரன் - கா.சுபா 223
49. லா.சு. ராமாமிர்தம் அவர்களின் வாழ்வும் பணியும்
மு.செண்பகவள்ளி 229
50. எம்.ஏ.சுசீலா அவர்களின் வாழ்வும் பணியும்
பேரா.சே.செந்தமிழ்ப்பாவை 232
51. சுந்தர ராமசாமியின் வாழ்வும் பணியும்
பேரா.சே.செந்தமிழ்ப்பாவை 235
52. புதினப்புகழ் சாண்டில்யன் (1910-1987)
பேரா.சே.செந்தமிழ்ப்பாவை 237
53. இந்திரா சௌந்திரராஜன்
முனைவர் க.சொல்லேருழவன் 239
54. எழுத்தாளர் தமிழ் மகன் - முனைவர் ம.தமிழரசன் 242
55. சி.சு.செல்லப்பாவின் வாழ்வும் பணியும்
முனைவர் ம.தமிழரசன் 245
56. உத்தமசோழரின் உயிரோட்டத் தமிழ்
முனைவர் வெ.தமிழரசி 247
57. சீர்திருத்தச் சிறுகதையாசிரியர் வீறுகவியரசர்
முடியரசன் - முனைவர் தமிழ்முடியரசன் 248 252
58. ஆ.மாதவன் - சு.தாரகேஸ்வரி 256
59. சிறுகதைகளில் அறிஞர் அண்ணா
முனைவர் வெ.திருவேணி 256 260
60. கலைஞரின் புதினங்கள் - முனைவர் வெ.திருவேணி 266
61. சமூகச் செயற்பாட்டாளர் அனுராதாரமணன்
தே.தீபா 272

# ம.ஸ்டீபன் மிக்கேல்ராஜ் சிறுகதையில் திருவிவிலியமும் திருக்குறளும்...*

காலத்தின் நிகழ்வுகளைக் கனகச்சிதமாக ஒரே நேர்கோட்டு முறையில் சொல்லி முடிப்பது சிறுகதையாகும். ஒரே பொருள், ஒரே கரு, ஒரே நோக்கு, ஒரே செய்தி, ஒரே முடிவு என வாசகர் உள்ளத்தில் பதியும்படிச் செய்தல் இவ்விலக்கியத்தின் சாரமாய்த் திகழ்கிறது. இந்தக் கட்டமைப்புகளோடு உலாவரும் ம.ஸ்டீபன் மிக்கேல் ராஜின் சிறுகதையில் பின்னிப் பிணைந்திருக்கும் திருவிவிலியமும் திருக்குறளும் குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

**படைப்பாளர் அறிமுகம்**

இவர் சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தே பிரித்தோ மேல்நிலைப் பள்ளியில் பட்டதாரித் தமிழாசிரியராகப் பணியாற்றி வருகிறார். கல்வியாளர்கள் சங்கமம் தமிழ் வளர்ச்சிக் குழுமம், காரைக்குடி வள்ளுவர்பேரவை, வீறுகவியரசர் முடியரசன் அவைக்களம், தே பிரித்தோ பள்ளியின் வீரமாமுனிவர் கலை இலக்கிய மன்றம் போன்றவற்றில் செயலாளர் பொறுப்பினை வகித்து வருகின்றார்.

'சுழல்' திங்களிதழ், 'தேமதுரம்' மின்னிதழ் ஆகியவற்றில் பொறுப்பாசிரியராகவும், 'ஆனந்த கங்கைத் தூது', 'கல்விடுடே' இதழ்களின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் பணியாற்றுவதோடு, 'தமிழமுது', 'மேடை நமதே', மாடல்ல மற்றையவை' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.

**பெற்ற விருதுகள்**

கலைச்சுடர், நட்சத்திர ஆசிரியர், கலாமின் கனவு ஆசிரியர், சிறந்த கல்வியாளர், இளம் எழுத்தாளர், சமூகச் சிற்பி, சமூக - கல்வி நற்சிந்தனையாளர், இலக்கியச் செல்வர், சிறந்த ஆசிரியர் போன்ற விருதுகளைப் பெற்றுள்ள இவர் காரைக்குடி அழகப்பா

---

* முனைவர் **யா.சாம்ராஜ்**, காட்டு நெடுங்குளம், கீழக்கண்டனி அஞ்சல், சிவகங்கை மாவட்டம்.

பல்கலைக்கழகத்தில் "முடியரசனாரின் படைப்பிலக்கியக் கொள்கைகள்" என்னும் தலைப்பில் ஆய்வு மேற்கொண்டு முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

**ஆனந்த கங்கைத் தூது**

பல்வேறு இலக்கியப் பத்திரிகைகளில் சிறுகதைகளைத் தொடர்ந்து எழுதிவரும் இவர் கடந்த ஐந்தாண்டு காலமாக சிவகங்கை மாவட்டத்திலிருந்து வெளிவரும் 'ஆனந்த கங்கைத் தூது' மாதஇதழில் அறுபது கதைகளுக்குமேல் எழுதியுள்ளார். இவரது எழுத்துக்கள் உண்மை நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுவனவாக அமைவதோடு இவருக்கென தனிப்பெரும் வாசகர்களை உருவாக்கியிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**வாழ்த்தட்டும் தலைமுறை**

ஏப்ரல் மாதம் தேவதைகளின் மாதம் என்று ஆரம்பிக்கும் இக்கதை, நிருபர் வசந்தன், ஒளிப்பதிவாளர் சின்னப்பன் வழிப் பயணிக்கிறது. பெண்களைப் போற்றும் ஏப்ரல் மாதத்தைத் தான் பணிபுரியும் பத்திரிகையில் பதிவுசெய்வதற்குத் தகுதியான ஒரு பெண்ணைப் பேட்டிகாண அலைந்து திரிகின்றபோது, நிருபர் வசந்தனின் மனைவி போன் செய்கிறாள்.

ஏற்கனவே கோபமாக இருக்கும் வசந்தனுக்கோ, தன் மனைவியின் தொலைபேசி அழைப்பு மேலும் கோபத்தை வரவழைக்கிறது.

"இப்ப நீவேற எதுக்குப் போன் பண்ணி இம்சை பண்ற?"

"காலையில சாப்பிடாம கிளம்பிப் போய்ட்டீங்க... அதான் சாப்பிட்டீங்களான்னு கேட்க போன் பண்ணேன்.."

"இப்பக் கொட்டிக்கிறது ஒன்னுதான் கொறச்சல்... வச்சுத் தொலைடி சனியனே..."

இப்படி மனைவியைத் திட்டும் வசந்தன் தான் ஒரு பெண்ணைப் பேட்டிகாணச் செல்கின்றார்.

"இயற்கை விவசாயம், சூரியஒளி மின்சாரம், டிஜிட்டல் பள்ளிக்கூடம், வேட்டு இல்லாத திருவிழா, சீரியல் பார்க்காத பெண்கள், புகை, மது இல்லாத ஆண்கள், இப்படி உச்சாணி என்ற கிராமத்தை வேறுபாதைக்குக் கொண்டுசெல்லும் பெண்மணி அன்னம்மாளுக்கு 74 ஆவது பிறந்தநாள் நிகழ்வை அந்த ஊரே அதிவிமரிசையாகக் கொண்டாடுகின்றது.

அந்த ஊரில் எல்லா ஆண்களும், பெண்களுக்குச் சரிசமமாக மதிப்புக்கொடுத்துப் பேசுவதைக் கவனிப்பதோடு, "மண்ணையும் பெண்ணையும் மதிக்கிறவங்கதாங்க ஆம்பள..." என்று குரல் கொடுக்கும் ஒரு ஆடவரின் பேச்சு வசந்தனின் உள்ளத்தை ஆட்டுவிக்கிறது.

முற்றும் உணர்ந்த வசந்தன் காலையில் தன் மனைவியைத் திட்டிக் காயப்படுத்தியதை எண்ணி மன்னிப்புக் கேட்பதற்காக அலைபேசியை எடுப்பதோடு கதை நிறைவுபெறுகிறது.

**கதையோடு பொருந்தும் திருவிவிலியமும் திருக்குறளும்**

"புத்தியுள்ள ஸ்திரி தன் வீட்டைக் கட்டுகிறாள்
புத்தியில்லாத ஸ்திரியோ தன் கைகளினால் அதை
இடித்துப் போடுகிறாள்" (நீதி.14:1)

இக்கதையோடு இவ்வார்த்தையைத் தொடர்புப்படுத்தி பார்க்கின்ற போது ஆவதும் பெண்ணாலே, ழிவதும் பெண்ணாலே என்னும் முற்போக்குச் சித்தாந்தம் வெளிச்சம்போட்டுக் காட்டப்படுகின்றது.

தனது கணவனின் நலனில் அக்கறை கொள்ளும் பெண்ணாக வசந்தனின் மனைவியும், உச்சாணி, கிராமத்தை மேம்படுத்துவதில் தலைசிறந்தவளாக 74 வயது அன்னம்மாளும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றனர். இதனை வள்ளுவப் பெருந்தகை அறத்துப்பால் (24) புகழ் என்னும் அதிகாரத்தில்,

"ஈதல் இசைபடவாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லைஉயிர்க்கு."

என்னும் குறள் மூலம் தெளிவுபடுத்துகின்றார்.

முடிவுரை

காலம் உணர்த்துவதைப் படைப்புகளாக்கிவரும் ம.ஸ்டீபன் மிக்கேல்ராஜ் மிகஎளியமனிதர்களின் உணர்வுகளை, உறவுகளை, உரிமைகளைப் படைப்புகளாய்ப் பதிவுசெய்து வருகின்றார். குறிப்பாக தனது கதைகளில் திருவிவிலியத்தையும் திருக்குறளையும் சிந்திக்க, தியானிக்கச் சொல்லி வாசகர்களிடம் ஒப்படைத்து விடுகிறார். மனிதன் எப்படியும் வாழ்வது வாழ்க்கையல்ல, இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்வதே வாழ்க்கை என்பது இவர் கதைவழிப் புலனாகின்றது.